ஸ்ரீ திரிபுரஸுந்தரீஸமேத ஸ்ரீ சந்திரமௌளீசுவராயநம:

# ஆர்யதர்மம்.

विना यस्य ध्यानं व्रजति पशुतां सूकरमुखां
विना यस्य ज्ञानं जनिमृतिभयं याति जनता ।
विना यस्य स्मृत्या कृमिशतजनिं याति स विभुः
शरण्यो लोकेशो मम भवतु कृष्णोऽक्षिविषयः ॥ कृष्णाष्टकम् ।

விநா யஸ்ய த்யாநம் வ்ரஜதி பஶுதாம் ஸூகரமுகாம்
விநா யஸ்ய ஜ்ஞாநம் ஜநிம்ருதிபயம் யாதி ஜநதா ।
விநா யஸ்ய ஸ்ம்ருத்யா க்ருமிஶதஜநிம் யாதி ஸ விபு:
ஶரண்யோ லோகேஶோ மம பவது க்ருஷ்ணோऽக்ஷிவிஷய: ।
க்ருஷ்ணாஷ்டகம் ।

எத்தப் பிரபுவைத்தியானிக்காததினுல் மனிதர்கள் பன்றி எறுமை, நாய் முதலான பசுஜன்மங்களை யடைகிறுர்களோ இதனுல் முன் ஜன்மாவில் மானிடப் பிறவியைப் பெற்றவர்கள்பகவத்தியானம்செய்யாததினுல்இப்பிறப்பில் பலவாரான கீழ்ப்பட்ட மிருகஜாதியில் ஜன்மாவைப் பெற்றிருக்கிறுர்களென்றும்இப்பொழுதுமனித ஜன்மத்தைப் பெற்றிருப்பவர்களும் பகவதாராதனம் செய்யாமலிருந்தால் மறுஜன்மத்தில் இவ்விதம் மிருகமாகவே ஜனிப்பார்கள் என்றும் அறிவிக்கப்படுகின்றது. பின்னும் ஜனங்கள் எந்தப்பிரபுவினுடைய ஞானத்தைப் பொராததினுல் ஜன்மாவாலும் மரணத்தாலும் உண்டாகும் பயத்தையடைகிறுர்களோ எந்த பிரபுவை ஸ்மரிக்காததினுல் பல கிருமிகளாகப் பிறவியைப் பெறுகிறுர்களோ பக்தர்களைப் பாதுகார்ப்பவரும் ஸகல லோகங்களுக்கும் நாதனும் விளங்கும் வியாபகரான அந்த கிருஷ்ண பகவான் என் அக்ஷிகளுக்குப் பிரத்தியக்ஷமாகக் காக்ஷியளித்து அனுக்கிரஹிக்க வேண்டுமாய் வேண்டுகிறேன்.

ஸகலரும் பகவானுெருவர் இருக்கிறுர் என்கிற ஞாபகமில்லாமலும், அவரை ஸ்மரிக்காமலும் இருக்கிறபடியால் பலவாறுன கஷ்டங்களை அனுபவிக்கும்படி நேருகின்றது. இனியாகிலும் பகவானை ஆராதனம் செய்தால் ஸுகித்திருக்கலாமென்று இதினுல் அறிந்து கொள்ளவேண்டும் உபபத்திராதிபர்.

ஆர்யதர்மம்.

பிரபவஸு ஆனி-மீ உ௩உ

# கலிகால தர்மோபதேஷ்டாக்கள்.

தர்மம்-மானிடப் பிறவியை அடைந்தவர்களால் இவ்வுலகத்திலோ பரலோகத்திலோ அடைய வேண்டுமென்று எப்பொழுதும் எதிர்பார்க்கப்படும். சுகத்திற்கு இஃதோர் இன்றியமையாத சிறந்த ஸாதனமாகும். ஸகல ஜகத்தும் இதில்தான் நிலைபெற்றிருக்கின்றது. தர்மம் என்கிற இக்கற்பகத்தை ஒருவன் கைவிடாமல் தனது வர்ணாசிரமத்திற்குற்றவாறு நன்கு பாதுகார்த்து வருவானாகில் எவ்வித விருப்பத்தையும் பெற்று பிறவியென்னும் பிணியைப் போக்கி மோக்ஷமென்னும் பரமபதத்தையுமடையலாம். இக்கருத்தையே "தர்மமானது ஸகல ஜகத்திற்கும் ஆதாரம். அதாவது அந்தந்த ஜாதி வர்ணாசிரமங்களுக்குக் கூறப்பட்ட தர்மங்களை அவரவர்களும் சரியாய் அனுஷ்டித்து வந்தால் க்ஷேமமுண்டாகி உலகம் சுகித்திருக்குமென்றும் தம் தர்மத்தை நன்கு அனுஷ்டிப்பவனை உலகிலுள்ள யாவரும் அடைகிறார்கள், தனக்கு விதிக்கப்பட்ட தர்மத்தைச் செய்வதாலும் விலக்கவேண்டியவைகளை விலக்குவதாலும், பாபங்களைப் போக்குகிறான். தர்மத்தில் ஸகலமும் அடங்கியிருக்கின்றது. ஆகையால் தர்மத்தின் உண்மையையறிந்த மகான்கள் அதை மிகவும் சிறந்ததாகக் கூறுகின்றார்கள் என்று தைத்திரீய சுருதி அறிவிக்கின்றது.

धर्मेण हि सहायेन तमस्तरति दुस्तरम् ।
धर्मप्रधानं पुरुषं तपसा हतकिल्बिषम् ।
परलोकं नयत्याशु भास्वन्तं खशरीरिणम् ॥ मनुः ।

𑌧𑌰𑍍𑌮𑍇𑌣 𑌹𑌿 𑌸𑌹𑌾𑌯𑍇𑌨 𑌤𑌮𑌸𑍍𑌤𑌰𑌤𑌿 𑌦𑍁𑌸𑍍𑌤𑌰𑌮𑍍 ।
𑌧𑌰𑍍𑌮𑌪𑍍𑌰𑌧𑌾𑌨𑌂 𑌪𑍁𑌰𑍁𑌷𑌂 𑌤𑌪𑌸𑌾 𑌹𑌤𑌕𑌿𑌲𑍍𑌬𑌿𑌷𑌮𑍍 ।
𑌪𑌰𑌲𑍋𑌕𑌂 𑌨𑌯𑌤𑍍𑌯𑌾𑌶𑍁 𑌭𑌾𑌸𑍍𑌵𑌨𑍍𑌤𑌂 𑌖𑌶𑌰𑍀𑌰𑌿𑌣𑌮𑍍 ॥ 𑌮𑌨𑍁𑌃 ।

தர்மத்தை ஸஹாயமாகக்கொண்டு மற்ருென்ருல் தாண்டவியலாத தமஸ் என்னும் ஸகலதுக்கத்திற்கும் காரணமான அக்ஞானத்தை விலக்கி விடுகிருன். தனக்குற்ற தர்மத்தைக் கைவிடாமல் எப்பொழுதும்சரியாய் அனுஷ்டிப்பவனை தர்மமானது பாபங்களிலிருந்தும்விலக்கிப்பிரகாசித்துக்கொண்டிருக்கும்ஸூக்ஷ்மசரீரத்துடன் பரலோகத்தை அடையும்படி செய்கின்றது என்று மனுவும் சொல்லியிருக்கிருர். இவ்விதமே மற்றும் பல மஹரிஷிகளும் கூறியிருக்கிருர்கள்.

இனி தர்மம் அதர்மம் இவைகளின் இலக்கணத்தை அறிந்து கொள்ளவேண்டியது முக்கியம். அதை நன்ருயறிந்தால் தான் அதர்மத்தை விலக்கவும் தர்ம்மத்தை அனுஷ்டிக்கவும் சாத்தியமாகும். தர்ம்மாதர்மத்தின் ஸ்வருபங்களை நேரில் கொண்டு வந்து மாடு குதிரை முதலானவைகளை அறியாத ஒருவனுக்கு அவைகளை எதிரில் காட்டி இதுதான் மாடு இதுதான் குதிரை இது யானை என்று காண்பிப்பதுபோல் அறிவிக்கஸாத்தியமில்லை என்கிற இந்த அபிப்பிராயத்தையே.

न धर्माधर्मौ चरत आवं स्व इति न देवा न गन्धर्वा न पितर इत्याचक्षतेऽयं धर्मोऽयमधर्म इति । आपस्तम्बः ।

𑌨 𑌧𑌰𑍍𑌮𑌾𑌧𑌰𑍍𑌮𑍌 𑌚𑌰𑌤 𑌆𑌵𑌂 𑌸𑍍𑌵 𑌇𑌤𑌿 𑌨 𑌦𑍇𑌵𑌾 𑌨 𑌗𑌨𑍍𑌧𑌰𑍍𑌵𑌾 𑌨 𑌪𑌿𑌤𑌰 𑌇𑌤𑍍𑌯𑌾𑌚𑌕𑍍𑌷𑌤𑍇𑌽𑌯𑌂 𑌧𑌰𑍍𑌮𑍋𑌽𑌯𑌮𑌧𑌰𑍍𑌮 𑌇𑌤𑌿। 𑌆𑌪𑌸𑍍𑌤𑌮𑍍𑌬𑌃 ।

தர்ம்மாதர்மங்கள் சரீரத்துடன் கூடியதாய்க்கொண்டு சந்தேகப் படுகிறவர்களுக்கெதிரில் வந்து நின்றுகொண்டு நாங்கள் தர்மாதர்மங்கள் இதோ வந்திருக்கின்ருேம் பாருங்கள் என்று கூற மாட்டா. தேவர்கள், கந்தர்வர்கள் பிதுருக்கள் முதலியவர்களும் அறிவிக்கமாட்டார்கள் என்று ஆபஸ்தம்பர் செப்பியிருக்கிருர்.

यद्यप्यप्रत्यक्षो वेदमूलभूतोऽस्मदादिभिर्नोपलभ्यते ।

𑌯𑌦𑍍𑌯𑌪𑍍𑌯𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌕𑍍𑌷𑍋 𑌵𑍇𑌦𑌮𑍂𑌲𑌭𑍂𑌤𑍋𑌽𑌸𑍍𑌮𑌦𑌾𑌦𑌿𑌭𑌿𑌰𑍍𑌨𑍋𑌪𑌲𑌭𑍍𑌯𑌤𑍇 ।

வேதத்தை மூலமாகக் கொண்டதும் அப்ரத்யக்ஷமுமான தர்மம் நம்போன்றவர்களால் பிரத்யக்ஷமாக அறிய முடியாது என்று வைத்திஞதீக்ஷிதரும் ஸ்மிருதிமுக்தா பலத்தில் வெளியிட்டிருக்கிறார். ஆகையால் ஒருவருக்கு. தர்மத்திலோ, அதர்மத்திலோ சந்தேகமேற்பட்டால் அதை பிரத்யக்ஷத்தில் நிரூபிக்க ஸாத்தியமில்லை. பின்னை சுருதிகளையும் அவைகளைப் பின் பற்றும் ஸ்மிருதி புராணங்களையும் கொண்டுதான் உண்மையை விளக்கமுடியும். சாஸ்திரங்களுமிவ்விதமே கூறுகின்றன.

धर्मं जिज्ञासमानानां प्रमाणं प्रथमं श्रुतिः ।
द्वितीयं धर्मशास्त्रं तु तृतीयं लोकसंग्रहः ॥ माधवीये ।

தர்ம்மம் ஜிஜ்ஞாஸமாநாநாம் ப்ரமாணம் ப்ரதமம் ச்ருதி꞉ ।
த்விதீயம் தர்ம்மசாஸ்த்ரம் து த்ருதீயம் லோகஸங்க்ரஹ꞉ ॥ மாதவீயே ।

தர்ம்ம ஸ்வரூபத்தை அறியவிரும்புவோர்களுக்கு முதற் பிரமாணம் வேதங்கள் ஸ்மிருதி என்று கூறப்பட்ட தர்மசாஸ்திரங்கள் இரண்டாவது பிரமாணமாகும். உலகில் சிஷ்டர்களால் அனுஷ்டிக்கபபட்டு வருவது மூன்றுவது பிரமாணம் என்று பராசரமாதவீயத்தில் சொல்லப்பட்டிருக்கின்றது.

(இன்னும்வரும்)

ஆர். உபபத்திராதிபர்.

---

## கும்பாபிஷேக முகூர்த்தத்தை ப்பற்றிய விக்ஞாபனத்திற்கு விடை.

(௫௯௭-வது பக்கத் தொடர்ச்சி)

अपि च- दुर्लग्नदुर्मुहूर्तोत्थदुर्निमित्तांशजाश्च ये ।
दोषास्सर्वे लयं यान्ति केन्द्रस्थाने बृहस्पतौ ॥
गुरुस्सर्वबलोपेतः लग्नकेन्द्रत्रिकोणगः ।
दोषाणां लक्षहन्ता स्यात् ...................... ॥
अपरं च-मुहूर्तपापषड्वर्गं कुनवांशगृहे स्थिताः ।
ये दोषास्तान्निहन्त्येव यत्रैकादशगः शशी ॥ इत्यादि

केन्द्रत्रिकोणगे जीवे शुक्रे वा यदि वा बुधे ।
सर्वे दोषा विनश्यन्ति पापा इव हरौ स्मृते ॥

ज्ञ-गुरू-रेकोऽपि केन्द्रस्थः शुक्रो वा यदि वा बुधः ।
दोषसंघान्निहन्त्येव केसरीवेभसंहतिम् ॥ [...ये ।

कवि च — बृहस्पति ... ...
दोषास्सर्वे लयं यान्ति केन्द्रस्थाने बृहस्पतौ ॥
गुरुस्सर्वगुणोपेतः लग्नकेन्द्रत्रिकोणगः ।
दोषाणां लक्षहन्ता स्यात् .................. ॥

कवाटं च — बृहस्पति ... ... स्थिताः । ये दोषास्तान्निहन्त्येव ... ॥ இத்யாதி வசனங்களால் சென்ற வருடம் தை-மீ நடை பெற்ற கும்பாபிஷேக முகூர்த்தவிஷயமாக சுந்தரஜோஸ்யருடைய பிந்திய பிரசுரத்தில் கண்டாந்தம் லக்னத்தில் பாபயோகம் பஞ்சகம் முதலியதுகள் கவனிக்கவேண்டியதவசியமில்லை போலிருப்பதாகவும் அதை ஆரியதர்ம பத்திரிகா வாயிலாகத்தெரிந்துகொள்ள வேண்டியும்எழுதியுள்ளார்.

ஷ்டி முகூர்த்தத்தில் குஜனிருப்பது குமாரஸ்வாமியின் பிரதிஷ்டையாகையாலும், கேந்திரத்தில் குரு, புத, சுக்கிரர்களிருப்பதால் லக்னபாபயோக சாந்தமிருப்பதும், 11-மிடத்தில் சந்திரன் வர்க்கோத்தமமாகயிருப்பதால் கண்டாந்தாபவாதமும், தசமகேந்திரத்தில் மூன்று சுபகிரகங்களுமிருப்பதால் விசேஷமாக அதிக நற்பலன்களுண்டாக நியாயமிருப்பதையும் கருதி ஷ்டி முகூர்த்தத்தை உபயோகிக்க நியாயமிருப்பதாகத் தோற்றுகிறது. நமது ஆரியதர்மம் 17-வது ஸஞ்சிகையில வெளிவந்த "ஐயவினா விற்களித்த செறிமுறையின் விடை" என்ற வியாஸத்தையும் பார்த்த பிறகும் சென்ற வருடம் தை மீ நடந்த முகூர்த்த விஷயமாக எழுதிய கேழ்விக்குச் சமாதானம் எழுதியதாக வாசகர் அறியவும்.

நா. சிவசுப்பிரமணிய சாஸ்திரிகள்,

ஹைஸ்கூல் பண்டிட்.

# சிதம்பரத்தில் அக்னிஷ்டோம யாகம்.

இக்கலியில் ஸாமான்யமானநித்தியகர்மானுஷ்டானமேநடை பெருவது சிரமமாயிருக்கிறது. ஆயினும் ஜன்மாந்தரத்தில் நல்வினை செய்தோர் இப்பவும் விசேஷ ஸத்கர்மங்களைச் செய்து வருகிறார்கள் என்பது வெளிப்படை. அவர்களில் சிதம்பரத்தில் முன்ஸீப் கோர்ட்டில் குமாஸ்தா வேலை பார்த்துவருகிற பிர்மஸ்ரீ நடேசய்யர் என்பவர் மஹாமஹோபாத்தியாய சிவதண்டபாணிஸ்வாமி தீக்ஷிதர் அவர்களிடத்தில் வேதாந்த சாஸ்திரம் அப்யஸித்ததின் பயனாக யக்ஞானுஷ்டானத்தில் விசேஷ சிரத்தை ஏற்பட்டு கொஞ்சகாலத்திற்குள்ளாகவே தீவ்ர முயற்சிகொண்டு ஸ்ரீஜகத்குரு காமகோடிபீடாதிபதிகளின் ஸன்னிதானத்தில் விக்ஞாபனம் செய்துகொண்டார்.

மஹாஸ்வாமிகள் இவருடைய சிரத்தை பக்தியைக் கண்டு ஸந்தோஷமுற்று சாத்தமங்கலம் முகாமில் ஸ்ரீமுகமும் அனுக்ரஹமும் அளித்தனர்.

அதன்பிறகு இப்பொழுது நடேசதீக்ஷிதர் எனும் சப்தத்திற்கு இலக்காயுள்ள அன்னவர் எல்லா ஸம்பாரங்களையும் தயார் செய்து கடந்த வையாசி-மீ 26உ ஆராதனம் செய்து மறுநாள் ஸோமயாகத்திற்கு ஸங்கல்பம் செய்தார். ஒவ்வொரு நாளும் ஆஸ்திக சிகாமணிகள் வந்து கண்டு களித்தனர். யக்ஞ விஷயமாயும், இது அவசியம் அனுஷ்டிக்க வேண்டியதென்றும் இதில் செய்யப்படுகிற வதம், வதமில்லை என்றும் மஹாமஹோபாத்தியாய தண்டபாணிஸ்வாமிதீக்ஷிதர், ராகவசாஸ்திரிகள், ராமசுப்பாசாஸ்திரிகள் இவர்கள் வெகு அத்புதமாக யக்ஞவாடத்தில் பிரதிதினம் உபந்யஸித்தார்கள். காசி, மதுரை, சென்னை முதலியவிடங்களிலிருந்து அநேகப்பிராமணோத்தமர்கள்வந்திருந்தனர். ச்ரௌதபாரங்கதர்களும் ஸோமபாஜிகளும் ரித்விக்குகளாக இருந்து உற்சாகமாய் யாகத்தை நடத்திவைத்து ஸபலமாக்கினர். இதில் ஸ்ரீ தண்டபாணிஸ்வாமிதீக்ஷிதர் அவர்களுடைய ஒவ்வொருகாலங்களிலும் ஸாந்நித்யமும், பெருமுயற்சியும், உபந்யாசத்தின் சிறப்புமே யாகம் செவ்வனே நடந்து பூர்த்தியடைந்ததற்கு முக்ய காரணம்.

இதனுல் ஒவ்வொரு வஸந்த ருதுவிலும் இந்தச் சிதம்பரக்ஷேத்திரத்தில் யக்ஞம் நடத்தவேணுமென்ற தீக்ஷிதரவர்கள் கோரிக்கையும் நிறைவேறும்படி சித்சபேசன் அருள் புரிவாராக.

### சிதம்பரம்.

இந்த க்ஷேத்திரத்திலுள்ள தீக்ஷிதர்கள் பிள்ளைகளுக்கு மாத்திரம் வேதம், காவ்யம், சாஸ்திரம், கணிதம், இங்கிலீஷ் இவைகளைப் போதிக்கும்படியாக சித்திரை.மீ முதல் ஒரு பாடசாலை சிவதண்டபாணிஸ்வாமிதீக்ஷிதர் பெருமுயற்சியால் ஏற்பட்டு நடந்து வருகிறது.

ஸ்ரீசித்ஸபேசமூர்த்திக்கு வருகிற ஆனித்திருமஞ்சன தினம் உதயத்திற்கு முந்தியே சந்தனுபிஷேகமும், பகல் 12 மணிக்கு தர்சனமும் செய்துவைப்பதாக சிவதண்டபாணிஸ்வாமி தீக்ஷிதர் பிரேரணையால் சாஸ்திர ஆதாரத்தோடு ஸித்தாந்தம் செய்யப்பட்டு அவ்விதமே நடக்கிறது.

வீ. உமாமகேச்வர சாஸ்திரி.
காட்டுமன்னர்கோவில்.

---

## ஸனகாதிகளின் வரலாறு.

(349-வது பக்கத்தொடர்ச்சி)

பிறவிப்பெருங்கடனீந்துவர் நீந்தா
ரிறைவனடி சேராதார்

**महेशपादपोतकावलम्बिनो नराश्च ये ।**
**तरन्ति ते भवाम्बुधिं कदापि नेतरे जनाः ॥**

മഹെശപാദപൊതകാവലംബിനൊ നരാശ്ച യെ ।
തരന്തി തെ ഭവാംബുധിം കദാപി നെതരെ ജനാഃ ॥

என்று சான்றோர்களும் மொழிகின்றனர். ஆகையால் ஞானத்திற்குரிய மனுஷ்ய ஜன்மத்தைத் தந்தருளிய பகவானிடம் வழிபட்டு அவருடைய திருவடிகளைத் தியானித்து, பக்தி மார்க்கத்தை யவலம்பிக்க வேண்டும்.

## கோமஹிமை.

மேலும் பகவானுடைய அனுக்கிரஹத்திற்குச் சாதனங்களான யாகங்களும், விசேஷமாய் பிராம்மணர்களாலேயே நடத்தப்படுகின்றன. அதற்குச் சாதனமான நெய் முதலிய திரவியங்களை பசுக்களே தருகின்றன. கோக்களைக் கீர்த்தனஞ் செய்வதும் தர்சிப்பதும் சகல பாபங்களையுமொழிக்கும். பசுக்களிடத்திலேயே சகல தேவர்களும் நிலை பெற்றிருக்கின்றனர். அவைகளே யாகத்திற்கு முகமாகின்றன. அவைகள் அமிழ்தத்திற்கே தங்குமிடம் தேஜஸ்ஸால் அவை அக்னிதுல்யங்கள், அவைகள் ஸ்வர்க்கத்துக்கு ஏற்படுத்தப்பட்ட ஸோபானங்கள் (படிகள்) அவைகள் விண்ணுலகிலும் பூஜிக்கப்படுகின்றன. கோக்கள் இஷ்டத்தைத் தரும் தேவதைகள் அவைகளைக்காட்டிலும் மேம்பட்டது ஒன்றுமில்லை, குலமானது கோகுலம் பிராம்மண குலம் என்று இரண்டாக வகுப்பட்டிருக்கிறது. பிராம்மணகுலத்தில் மந்திரங்கள் இருக்கின்றன, கோகுலத்தில் ஹவிஸ்ஸானது இருக்கிறது. ஆகையால் பிரும்மகுலமும் பசுக்களும் பரமாத்மாவுக்கு அந்தரங்கமானவர்கள் என்று காசியபர் சொல்லி முடிந்ததும் மற்றயாவரும சிலாகித்தார்கள்,

## பிராம்மணரின் சொல்.

அப்போது காசியபர் உள்பட மற்றயாவரும் அரசனுடைய குணகணங்களைக் கொண்டாடி சொல்லத் தொடங்கினர். ஆதிராஜனே "புத்திரனுல் உலகங்களை ஜயிக்கிறான்" என்ற மறையின் பொருள் உம்மால் உண்மையாக்கப்பட்டது.

ஏனெனில் பிரும்மதண்டத்தால் நசித்த பாபியானவேனனும் உம்மால் நரகத்திலிருந்து கரையேற்றப்பட்டான், பகவன் னிந்தையையே கடமையாகக்கொண்ட ஹிரண்யகசிபுவும் பிரஹ்லாத ஆழ்வாரால் மேலுலகமடைவிக்கப்பட்டான். கருணைக்கடலாகிய உமக்குக் குடிகளிடம் அநுராகமிருப்பது இயல்பே. "நிஷ்காமகர்மாக்களைச்செய்பவருக்கல்லவா மறுமூப்பு நீங்கும்', என்று உம்மால் திடமாய் அறிந்து கொண்ட யாவரும் அவ்வண்ணமே செய்து வருவார்கள். தாங்கள் பகவானுடைய அவதாரமானதால் வேதத்தின்சித்தாந்தத்தை நன்குணர்ந்து அறிவிக்கிறீர்கள். மஹாவிஷ்ணுவின் அனுக்கிரஹப்படி தங்கள் இல்லத்திலேயே பிரும்ம

புத்திரர்களின் உபதேசம் சீக்கிரம் கிடைக்கப்போகிறது என்று மொழிந்தார்கள். அரசன் அவர்களைக் கொண்டாடி தக்கபடி யுப சரித்துமஹான்களின் தர்சனத்தை எதிர்பார்த்த வண்ணமாயிருந்தான். சுபம்.

கே. வி. சுப்பிரமணிய சாஸதிரிகள்.

---

# ஆன்ஹிக க்ரமம்.

(203-வது பக்கத்தொடர்ச்சி)

## பஞ்சாயதந பூஜா.

அவரவருக்கும் ப்ரியமானது அல்லது குலக்ரமமாக வந்த தான ஒரு தேவரை ப்ரதானமாக வைத்து மற்றவைகளை அங்கமாக அமைத்து அர்ச்சிப்பது. ஸர்வஸ்மிருதிகளுக்கும் ஸம்மதமானதாகும், சிஷ்டாசாரமும் அதுவேயாம். அப்பூஜாவிதி நித்யமாகவும் காம்யமாகவும் விரிவாகவும் வர்ணிக்கப்பட்டிருப்பினும் தக்ஷிணதேசத்து சிஷ்டர்கள் பரம்பரையாக அனுஷ்டித்து வருவதில் சுருக்கமானதும் தற்கால அவசரத்திற்கேற்றதுமானதைக் கூறுவதே பொருத்தமாயிருக்கும். தியான ஆவாஹனாதி பதினெரு உபசாரங்களுக்கு சைவர் ருத்ரமந்திரங்களையும் வைஷ்ணவர் புருஷஸூக்தத்தையும் அம்பிகையை அர்ச்சிப்பவர் ஸ்ரீ ஸூக்தத்தையும் முறையே கூறுவர்.

ஸ்நாந வஸ்த்ர புண்ட்ராதிகளுக்குப் பிறகு காலலம்பி ஆசமனீயம் செய்துதானே பூஜைக்குச்சந்தனமறைக்கவேண்டும். ஸௌகரியமில்லாவிடில் மனைவி சிஷ்யர் புத்ரர் புத்ரி முதலியவர்கள் ஆசாரக் குறைவின்றி அறைத்துத் தரலாம். கல் கட்டைகளை நன்ருகத் தேய்த்து சுத்தஜலத்தை உத்திரிணியால் எடுத்துவிட்டு நகம்படாமல் கெட்டியாக அறைத்து வருவது முறை. ஜலத்துடன் எடுத்து வந்து ஸ்வாமி வஸ்திரத்தால் பிழிவது தகாது. ஸ்வாமிகளை கிழக்கல்லது வடக்கு முகமாக வைத்து எதிரில் தான் உட்கார்ந்து கீழுள்ள பூதப்ரேதாதிகளை விலக்கி ஆஸன மந்திரத்தை ஜபிக்க வேண்டும். பிறகு ஸங்கல்பம் செய்து தேவதைகளை

அழைப்பதற்கும் ராக்ஷஸர்களை விரட்டுவதற்கும் அறிகுறியான மணியை அடித்து தீர்த்த பாத்திரத்தில் தேவ பூஜைக்காக கங்கை முதலிய ஏழு புண்ணிய நதிகளையும் ஹரிஹரப்ரம்மாதிகளையும் ருக்யஜுஸ் ஸாமங்களையும் அழைத்துச் சந்தன புஷ்பாதிகளால் அர்ச்சித்து நகம் படாமல் கையால் மேலே மூடிக்கொண்டு சில வேத மந்திரங்களைக் கூறவேண்டும். அதனுள்ளே வைத்த புஷ்பஜலத்தினால் தன்னையும் ஸகலபூஜா த்ரவ்யங்களையும் ப்ரோக்ஷித்துக் கொள்ளவேண்டும். அதேபோல் சங்கத்தைத்தீர்த்தத்தால் நிரப்பி சந்தந புஷ்பாதி பூஜைசெய்து சில மந்திரங்களைச் சொல்லி அந்த ஜலத்தில் பாதியைக்கலசத்தில் விட்டு சங்கத்தை பூர்த்தி செய்யவேண்டும். சங்கத்தை எப்போதும் கீழே வைக்கலாகாது. சிவப்ரதான பூஜையில் ஐந்து கலசங்களை வைத்து நடு ஈசானன் கிழக்கே தத்புருஷன். தெற்கே அகோரன் வடக்கே வாமதேவன் மேற்கே ஸத்யோஜாதன் என்பவர்களை அந்தந்த மந்திரங்களால் ஆவாஹனம் செய்து அதற்கு ஸகல பூஜைகளையும் செய்து முடிவில் அபிஷேகம் செய்ய வேண்டும். இக்கலச பூஜைக்குப் பிறகு ஆத்மபூஜை செய்ய வேண்டும். அண்டத்தில் காணுமனைத்தையும் பிண்டத்தில் பார்த்து க்ரமமாக ஜீவான்மாவைப் பரமாத்மாவாகப் பாவித்து அத்வைதாநந்த அமிருத ஸாம்ராஜ்யத்தைப் பெரும்படி தூண்டுவதே இதன் நோக்கமாகும். காயமே கோயிலாம். ஜீவனே ஸநாதனமான தேவனும். (மதியே உமையாம்) அக்ஞானமே பழைய குஸுமங்களாம். இதே கருத்தை ஸ்ரீ ஜகத்குரு சங்கரபகவத்பாதாள் சிவாநந்தலஹரியில் அழகாகப் பாடியுள்ளார். "ஜீவனே சிவன் மதியே உமை. பஞ்சப்ராணனே பரிஜனம். உடலே கோயில். அநுபவிக்கும் விஷயமே பூஜை. உறங்குதலே ஸமாதி. நடப்பதே ப்ரதக்ஷிணம். பேசுவதெல்லாமே ஸ்துதி. செய்வதெல்லாம் உன்னாராதனையே " என. ஆதலால் ஹ்ருதய கமலத்தில் ரத்ன ஸிம்மாஸனத்தில் அமர்த்தி உமாகாந்தனை ஒரு நிமிஷமேனும் அகக்கண்ணால் கண்டு அர்ச்சிப்பதே உத்தமம். அப்பாமனை வெளியேயுள்ள மூர்த்திகளில் ஆவாஹனம் செய்யவேண்டும். ஐந்து மூர்த்திகளுக்கும் உரிய ஐந்து வேதமந்திரங்களுண்டு.

பிறகு (த்யானம்) (ஆவாஹனம்) (ஆஸநனம்) (காலலம்ப) பாத்யம் (கைகழுவ) அர்க்யம் ஆசமனீயமெனும் நாலைந்து ஆரா

தண உபசாரங்களைச் செய்யவேண்டும். ஏழாவதாக ஸ்நாநம் செய்விக்க வேண்டும். சுத்த ஜலத்தாலும் காய்ச்சின பாலாலும் சங்க ஜலத்தாலும் பஞ்ச கலசத்தாலும் அபிஷேகத்தை பூர்த்தி செய்ய வேண்டும். விசேஷமாக மது பஞ்சாமிருதம், க்ருதம், பழரஸம் இக்ஷுரஸம் முதலியவைகளால் விசேஷதினங்களில் செய்யலாம். தேனபிஷேகமும் குங்குமார்ச்சனையும் கொஞ்சம் கொஞ்சமாகச் செய்யவேண்டும். நித்ய பூஜைக்குப் பால் போதுமானது அபிஷேக காலத்தில் ஸ்ரீருத்ரசமக புருஷஸூக்த ஸ்ரீஸூக்தங்களை ஜபிக்கவேண்டும். சுத்தமானதும் உலர்ந்ததும் அதற்கெனத் தனியாய் வைக்கப்பட்டதுமான ஸ்வாமி வஸ்திரத்தால் துடைத்து வைத்து ஆசமனீயம் ஸமர்ப்பித்து எட்டாவதாக வஸ்த்ரமுடுத்த வேண்டும். கந்த மந்திரத்தால் ஒன்பதாவதாகச் சந்தனமிட்டு தசமமாக புஷ்பார்ச்சனை செய்யவேண்டும். புஷ்பம் கிட்டாகவிடத்தில் அக்ஷதை அல்லது உலர்ந்த துளஸீபில்வங்களைக் கொண்டு ப்ரதாந தேவருக்கு அஷ்டோத்தரசத அர்ச்சனையும் அவகாசத்திற்கும் சிரத்தைக்கும் தக்கபடி மற்றவர்களுக்கு அர்ச்சனை செய்ய வேண்டும். பதினொன்று பன்னிரண்டு பதிமூன்று பதினான்காவது உபசாரங்கள் தூபதீப நைவேத்ய கர்பூர நீராஜனங்களாம். அதற்கும் தனித்தனி வேதமந்திரங்களுண்டு.

நாம் சாப்பிடும் எல்லாவற்றையும் அப்படியே நிவேதனம் செய்வார் சிலர். ஒரு புருஷாஹாரத்திற்குக் குறையாமல் நிவேதனம் செய்வது உசிதம். பதினைந்து பதினாறுகளால் ப்ரதக்ஷிண நமஸ்காரமும் செய்யவேண்டும். இதே ஷோடசோபசார பூஜையாம். சிலரநுஷ்டானத்தில் விஸர்ஜனத்தைச் சேர்த்து ஏதேனுமொன்றை இடையில் விடுவர். ஸ்துதிப்ரார்த்தனைகளைச் செய்ய இதே சமயம். இச்சமயத்திலேனும் ஆரம்பத்திலேனும் இரண்டுசமயத்திலும் பஞ்சாக்ஷரி அல்லது உரிய மந்திரத்தை ஜபிப்பதுண்டு. பிறகு நந்தி பூஜை செய்து அவர்களுக்குத் தனியாக தேவ நிவேதநமான அன்னத்தில் ஓர் பாகத்தை எடுத்து நிவேதனம் செய்ய வேண்டும். அதே காகபலியாகப் போடலாம். (நந்திக்கு நிவேதனம் செய்ததை நாம் புஜிக்கலாகாது.) உடனே சங்கஜலத்தை ஸ்வாமியைச் சுற்றி அபிஷேக தீர்த்தத்தில் விடவேண்டும். "சங்கர் அல்லது மஹாவிஷ்ணுவின் மேல் சுற்றிவிடப்பட்ட ஜலம்,

மனிதர்மேல் பட்டவுடன் பல ப்ரம்மஹத்யாதி தோஷங்களை நீக்கும்” என ஓர் சுலோகமே இதற்கு மந்திரம். மறுபடியும் கீழே மூர்த்தியில் அவதரித்த தேவர்களை ஹ்ருதய கமலத்திலேற்ற வேண்டும். அதற்கும் இதே கருத்து கொண்ட ஓர் சுலோக முண்டு. பின்னர் அபிஷேக ஜலத்தை “அகாலம்ருத்யுவைப்போக்குவதும் ஸர்வ வ்யாதியை ஒழிப்பதுமான பாதோதகம் சுபமானது. எல்லாப் பாபத்தை நீக்குவது” எனக் கூறி உட்கொள்ள வேண்டும்.

ஸ்ரீவத்ஸ வே. ஸோமதேவசர்மா.

---

௨

॥ श्रीगुरुभ्यो नमः ॥ ஸ்ரீகுருப்யோ நம: ॥

# தலையூர் அத்வைத வித்யாசாலை

स्थावरा जङ्गमा मर्त्या ब्राह्मणा मुनयस्सुराः ।
शिव इत्यप्यमी भेदाश्चिदुत्कर्षनिबन्धनाः ॥

ஸ்தாவரா ஜங்கமா மர்த்யா ப்ராஹ்மணா முநயஸ்ஸுரா: ।
ஶிவ இத்யப்யமீ பேதாஶ்சிதுத்கர்ஷநிபந்தநா: ॥

புல் பூண்டு முதலிய ஸ்தாவரங்கள் பசு பக்ஷி முதலிய ஜங்கமங்கள் மனுஷ்யர்கள் பிராமணர்கள் ரிஷிகள் தேவர்கள் சிவன் ஆகிய இவர்கள் மெம்மேலும் உயர்வுடையவர்களாயிருப்பதற்குக் காரணம் மெம்மேலும் ஞானத்தின் உயர்வே.

अपि मानुष्यकं लब्ध्वा भवन्ति ज्ञानिनो न ये ।
पशुतैव वरं तेषां प्रत्यवायाप्रवर्तनात् ॥

அபி மாநுஷ்யகம் லப்த்வா பவந்தி ஜ்ஞாநிநோ ந யே ।
பஶுதைவ வரம் தேஷாம் ப்ரத்யவாயாப்ரவர்தநாத் ॥

மனுஷ்ய ஜன்மத்தை அடைந்தும் எவர்கள் ஞானத்தையடையாமலிருக்கின்றார்களோ அவர்களுக்குப் பசு ஜன்மமே மேலானது.

ஏனெனில் விதிவிலக்குகளுக்குட்படாத பசு ஜன்மத்தில் பாபமொன்றும் ஸம்பவிக்காதபடியால் என்பது முதலிய வசனங்களால் மனுஷ்யர்களாயும் அதிலும் பிராமணர்களாயும் ஜனித்தவர்களுக்கு நித்யகர்மானுஷ்டானம் முதலிய ஸாதனங்களின் அனுஷ்டானக்ரமத்தால் நிரதிசயபுருஷார்த்தஸாதனமாகிய ஆத்மஞானத்தை ஸம்பாதிப்பது மிகவும் ஆவச்யகம்.

இக்கருத்தை உத்தேசித்தேசித்தே நமதாசார்யோத்தமர்களான கும்பகோணம் ஸ்ரீகாஞ்சிகாமகோடிபீடாதிபதிஸ்ரீமத்ஜகத்குரு சங்கராசார்ய ஸ்வாமிகளவர்களால் இவ்வூரில் சென்ற துர்மதி ௵ தை௴ 20௳யில் ஸ்தாபிக்கப்பட்டு நடந்து வந்து அத்வைத வித்யாசாலையானது அனேக ஆஸ்திகோத்தமர்களின் உதவியால் மூன்று வருஷங்கள் வெகு விமர்சையாய் நடைபெற்று प्रस्थानत्रय ப்ரஸ்தாநத்ரயபாடங்களும் பூர்த்தியாக நடந்து மத்தியில் श्रेयांसि बहुविघ्नानि ச்ரேயாம்ஸி பஹுவிக்நாநி மிகவும் சிரேயஸ்கரங்களான நல்ல காரியங்களுக்கு இடையூறுகள் அதிகமாய் ஏற்படும் என்கிறபடி சிலகாலம் நின்றிருந்து அக்காலங்களில் வேதாத்யயனமும் காவ்ய பாடங்களும் நடைபெற்று விக்கினங்கள் நிவர்த்தியானவுடன் பிரபவ௵ சித்திரை௴ 25௳ பானுவாரத்தன்று கும்பகோணம் ஸ்ரீ காஞ்சிகாமகோடி பீடாதிபதிகளான ஜகத்குரு ஸ்ரீ சங்கராசார்யஸ்வாமிகளவர்களால் மறுபடியும் ஸ்ரீமுகம் கொடுக்கப்பட்டதின் பேரில்பிரபவ௵வைகாசி௴ 22௳ ஸ்திரவாரம் புஷ்யநக்ஷத்திரம் கூடிய சுபதினத்தில் மிதுன லக்னத்தில் போலகம் ப்ரம்மஸ்ரீ சு. ஸ்ரீராமசாஸ்திரிகளவர்களால் உபாத்தியாய ஸ்தானம் வகிக்கப்பட்டு ௸ அத்வைத வித்யாசாலை ஆரம்பிக்கப்பட்டு நடந்து வருகிறது.

அதில் வாசிக்க விரும்பும் வித்தியார்த்திகளுக்கு போஜனாதி ஸௌகர்யங்களுக்காக ௴ 1க்கு ரூபாய் 10-முதல் ரூபாய் 15-வரையில் உபகாரத்திரவியம் குடுக்கப்படும்.

அபேக்ஷையுள்ளவர்கள் இரண்டு வாரத்திற்குள் ௸ ஜகத்குரு ஸ்ரீசங்கராசார்யஸ்வாமிகளவர்களுக்கும் தலையூர் வித்யாசாலை கார்யதர்சியவர்களுக்கும் தெரிவித்துக் கொள்ளவேண்டியது.

ஆஸ்திகர்களனைவரும் இந்த ஸத்கார்யத்திற்குத் தங்களாலியன்றவரை ௵ 1-க்கு ரூபாய் 1-க்குக்குறையாமல் உதவிசெய்து

இந்த வித்யாசாலையை அபிவிருத்திக்குக் கொண்டு வந்து ஜகத்குரு ஸ்ரீ சங்கராசார்ய ஸ்வாமிகளவர்களுடைய பூர்ணானுக்கிரகத்திற்குப் பாத்திரர்களாகி நிகில புருஷார்த்தங்களையும் அடைய வேணுமாய்க் கேட்டுக் கொள்ளுகிறேன்.

கி. கிருஷ்ணஸாமி அய்யர்,

அத்வைத வித்யாசாலை காரியதரிசி.

---

# ஸ்ரீ லக்ஷ்மீ பார்வதீ ஸம்வாதம்

भिक्षार्थी स क्व यातः सुतनु बलिमखे ताण्डवं क्वाद्य भद्रे
मन्ये वृन्दावनान्ते क्व नु स मृगशिशुः नैव जाने वराहम् ।
बाले कच्चिन्नदृष्टो जरठवृषपतिः गोप एवास्य वेत्ता
लीला सल्लाप इत्थं जलनिधिहिमवत्कन्ययोस्त्रायतां वः ॥

𑌭𑌿𑌕𑍍𑌷𑌾𑌰𑍍𑌥𑍀 𑌸 𑌕𑍍𑌵 𑌯𑌾𑌤𑌃 𑌸𑍁𑌤𑌨𑍁 𑌬𑌲𑌿𑌮𑌖𑍇 𑌤𑌾𑌣𑍍𑌡𑌵𑌂 𑌕𑍍𑌵𑌾𑌦𑍍𑌯 𑌭𑌦𑍍𑌰𑍇 𑌮𑌨𑍍𑌯𑍇 𑌵𑍃𑌨𑍍𑌦𑌾𑌵𑌨𑌾𑌨𑍍𑌤𑍇 𑌕𑍍𑌵 𑌨𑍁 𑌸 𑌮𑍃𑌗𑌶𑌿𑌶𑍁𑌃 𑌨𑍈𑌵 𑌜𑌾𑌨𑍇 𑌵𑌰𑌾𑌹𑌮𑍍 । 𑌬𑌾𑌲𑍇 𑌕𑌚𑍍𑌚𑌿𑌨𑍍𑌨𑌦𑍃𑌷𑍍𑌟𑍋 𑌜𑌰𑌠𑌵𑍃𑌷𑌪𑌤𑌿𑌃 𑌗𑍋𑌪 𑌏𑌵𑌾𑌸𑍍𑌯 𑌵𑍇𑌤𑍍𑌤𑌾 𑌲𑍀𑌲𑌾𑌸𑌲𑍍𑌲𑌾𑌪 𑌇𑌤𑍍𑌥𑌂, 𑌜𑌲𑌨𑌿𑌧𑌿𑌹𑌿𑌮𑌵𑌤𑍍𑌕𑌨𑍍𑌯𑌯𑍋𑌸𑍍𑌤𑍍𑌰𑌾𑌯𑌤𑌾𑌂 𑌵𑌃 ॥

மகாலக்ஷ்மியும் பார்வதி தேவியும் அடிக்கடி ஒருவரையொருவர் பரிஹஸித்துக்கொண்டு லீலையாக ஸம்பாஷிப்பது வழக்கம். ஒரு நாள் அடியிற் கண்டவாறு இருவருக்கும் ஸம்பாஷணையொன்று நிகழ்ந்தது.

உலகத்தில் ஒரு ஸ்திரீயின் கணவனை நிந்தித்தால் தான் அவளுக்கு மிகுந்த லஜ்ஜை ஏற்படுமாதலால் லக்ஷ்மீதேவியானவள் பார்வதியின் கணவனான பரமசிவன் கையில் மண்டை ஓடுடனும் விபூதிதாரணம் செய்தும் பிக்ஷாடனஞ் செய்து வருவதால் அவள் கணவன் பிச்சைக்காரன் என்றும்; ஸகல ஐசுவரியத்திற்கும் யஜமானனாகிய தன் கணவனான விஷ்ணு பணக்காரன் என்றும் நினைத்துப் பார்வதியைக் குறித்து, भिक्षार्थी स क्व यातः सुतनु 𑌭𑌿𑌕𑍍𑌷𑌾𑌰𑍍𑌥𑍀

ஸ க்வ யாத: ஸாதநா 'அழகிற்சிறந்த தேகம்படைத்த பார்வதியே அந்த பிக்ஷுகன எங்கே சென்றிருக்கிருன்?' என்று வினவினுள்.

பார்வதியோ லக்ஷ்மியின் மனப்பான்மையை அறிந்து தன்னைப் பரிஹஸிக்கவே அவ்விதம் கேட்கிருள், ஆதலின் அதற்கு தகுந்த பதிலை கூறவேண்டும் என்று தீர்மானித்து "அம்மா! அவன் बलिमखे பலிமகே பலிச்சக்ரவர்த்தியின் யாகசாலையில் இருப்பான்' என்ருள். அதாவது 'லக்ஷ்மீ! என்னுடைய கணவன்தாஞ பிக்ஷுகன், உன்னுடைய கணவனுன விஷ்ணுவும் பலிச்சக்ரவர்த்தியிடம் மூன்று காலடி அளவுள்ள பூமியை யாசிக்க வில்லையா? என பர்த்தாவோ தேகத்தைக் குறுக்கிக் கொள்ளாமல் பிக்ஷை எடுக்கிருர். உன் பர்த்தாவோ தன்னை வாமனனுகச் செய்துகொண்டு யாசித்தார்' என்று அர்த்தமுள்ள பதிலைக்கொடுத்தாள்.

லக்ஷ்மீதேவி மறுபடியும், பரமசிவன் சிதம்பரத்தில் நர்த்தனம் செய்ததைக் குறித்துப் பார்வதியின்கணவன் கூத்தாடிஎன்று அர்த்தம் விளங்குமாறு ताण्डवं क्व च भद्रे தாண்டவம் க்வ ச பத்ரே அம்மா! உன் கணவனின் நர்த்தனம் இப்போது எங்கேகாணும்? என்று கேட்டாள். இதைக்கேட்ட பார்வதி 'என் கணவன் ஏதோ ஒரு சமயத்தில் கூத்தாடினுர். உன் கணவனுன ஸ்ரீ கிருஷ்ணரோ இரவு முழுவதும் கோபஸ்திரீகளுடன் கலந்து பிருந்தாவனப்பிரதேசத்தில் ராஸக்ரீடை என்ற பெருங்கூத்தை வெகு காலம் நடத்தவில்லையா! உன் கணவன்தான் பெரிய கூத்தாடி' என்று அர்த்தம் விளங்குமாறு मन्ये वृन्दावनान्ते மந்யே வ்ருந்தாவநாந்தே 'பிருந்தாவனப் பிரதேசத்தில் நடக்கிறது என்று எனக்குத் தோன்றுகிறது' என்ருள்.

இவ்வாறு பதிலளிக்கப்பட்ட லக்ஷ்மி தன் கையில் மான் குட்டியை (ஓர் மிருகத்தை) வைத்திருக்கும் பரமசிவனைப் பரிஹஸிப்பதற்கு क नु स मृगशिशुः க்வ நு ஸ ம்ருகசிசு: மிருகசிசுவை வைத்திருப்பவர் எங்கே? என்று வினவினுள். பார்வதியும் 'லக்ஷ்மீ! மான் ஸஞ்சரிக்கும் பிரதேசம் மிகவும் புனிதமானது. அதன் தோலை ஞானிகள் கூட ஆஸனத்திற்கு உபயோ

கிக்கிறார்கள். இப்பேர்ப்பட்ட மானைக் கையில் வைத்திருப்பதால் என்ன தோஷம? மானைப்போலல்லாது பரிசுத்தமற்ற கேவல மான பன்றியின் உருவெடுத்தாரல்லவா உன் கணவன்! (வராஹா வதாரம்) என்ற பொருளடங்கிய नैव जाने वराहमु நைவ ஜாநே வராஹமு அந்த வராஹத்தை நான் அறியவில்லை' என்று பதிலைக் கூறினாள். (ம்ருக சப்தத்திற்கு 'மான்' 'பிராணி' என்ற இரு அர்த்தங்களையும் இங்கு கவனிக்க)

ஒவ்வொரு முறையும் சரியான பதிலைக் கொடுப்பதைப்பார்த்து லக்ஷ்மீ மீண்டும அவளைப பார்த்து 'உன் கணவனுக்குச் சிறந்த வாகனம் கிடைககவில்லையே! ஒரு கிழமான மாடுதான அவருக்குக் கதி' என்று அர்த்தம் பொருந்திய 'பெண்மணியே அந்த சிரேஷ்டமான கிழ விருஷபம் எங்கே? என்ற கேள்வியைக கேட்டாள. பார்வதியும அதற்குச்சளைக்காமல் மாட்டைப் பற்றி எனககு எப்படித் தெரியும் மாட்டை மேய்க்கும் இடையனுக்கல்லவோ (கோபன) தெரிந்திருககும் எனறாள. அதாவது 'என் கணவனுககு விருஷபம் வாஹனமாயுளது. உன கணவனே அப்பேர்ப்பட்ட மாடுகளை மேய்பபவன் என்று தாதபரியம்.

நேயர்களே! மேற் கூறப்பட்ட ஸம்வாதமானது உங்கள் யாவருக்கும் வியப்பை உண்டு பண்ணியிருககும் என்றே நம்புகிறேன். ஆனாலும் ஸர்வ ஜகன்மாதாவான லக்ஷ்மீதேவியும் பார்வதியும் ஸாதாரணமான லௌகிக ஸ்திரீகளைப் போல் இப்படிப் பரிஹாஸமாகப் பேசிககொள்வார்களா?

लीलार्थमपि यद्ब्रूयुः स धर्मः परमः स्मृतः ।

𑌲𑍀𑌲𑌾𑌰𑍍𑌥𑌮𑌪𑌿 𑌯𑌦𑍍𑌬𑍍𑌰𑍂𑌯𑍁𑌃 𑌸 𑌧𑌰𑍍𑌮𑌃 𑌪𑌰𑌮𑌃 𑌸𑍍𑌮𑍃𑌤𑌃 ।

'மகாஞானிகள் வேடிக்கையாகக் கூறும் வார்த்தையிலும் சிறந்த தர்மஸூக்ஷ்மங்கள் அடங்கியிருக்கின்றன' என்ற பிரமாணத்தின் படி மேற்சொன்ன லீலா ஸம்வாதத்திலும் அரிய தர்மஸூக்ஷ்மங்கள் நிரமபியிருக்கும் என்றே என் சிற்றறிவுக்குத் தோன்றுகிற படியால் அவைகளை இங்கு அற்பம் வெளியிடுகிறேன்.

(தொடரும்)

ஸ்ரீ மாத்வஸபை } M. ராமராவ்.
கும்பகோணம். } காரியதரிசி.